திருப்பூரில் தி.மு.க. மாணவரணி பொறுப்புகளுக்கான நேர்காணல்

▶ திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் நேர்காணல் நிகழ்ச்சி வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

திருப்பூர்,செப்.20: திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணியின் ஒன்றியம் மற்றும் பகுதி, நகரம், பேரூர் பொறுப்புகளுக்கான நேர்காணல், திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள முரசொலி மாறன் அரங்கத்தில் நடந்தது. தி.மு.க. மாணவர் அணி மாநிலதுணைச்செயலாளர் கோகுல் நேர்காணலில் ஈடுபட்டார்.

இதில் மேயர் தினேஷ்குமார்,தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு. நாகராசன், மாவட்ட அவைத்தலைவர் நடராஜன், துணை செயலாளர் வக்கீல் குமார், மாணவரணி அமைப்பாளர் கோபிநாத், பகுதி செயலாளர்கள் மேங்கோ பழனிச்சாமி, மின்னல் நாகராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் எம்.எஸ். மணி, திலக் ராஜ் மற்றும் கவுன்சிலர் ராதாகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கலெக்டர் அலுவலகத்தில்
கடன் வழங்குவதற்கான ஆயத்த முகாம்

திருப்பூர், செப்.20: தேசிய பழங்குடியின பட்டியலின பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் சார்பில் மத்திய, மாநில அரசுகள் சார்பில் கடன் வழங்குவதற்கான ஆயத்த முகாம் கலெக்டர் அலுவலகத்தின் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் நடந்தது.

தேசிய பழங்குடியின, பட்டியலின பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் தலைமை மேலாளர் பிஸ்மிதா பங்கேற்றார்.

கூட்டத்தில் அதிகாரிகள் பேசியதாவது:நாடோடிகளாக வாழ்ந்து வரும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், இந்த கடன் வழங்குவதற்கான ஆயத்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது.திருப்பூர் மாவட்டத்தில் 159 பேருக்கு கடன் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.மத்திய மாநில அரசுகள் இணைந்து இந்த கடனை வழங்குகின்றன. ஒருவருக்கு ரூ. 2 லட்சம் கடன் வழங்கப்படும். இதில் ரூ.1 லட்சம் மானியமாகும்.

▶ பழங்குடியினர் மக்கள் தொழில் தொடங்குவதற்கான வங்கிக் கடன் வழங்குவது குறித்த கலந்தாய்வு கூட்டம் திருப்பூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் சிறு தொழில் தொடங்குவது குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

கந்துவட்டி கொடுமைகளில் இருந்து மீட்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாக இந்த திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் இணைந்து பழங்குடியின மக்களுக்கு வழங்குகின்றன. இந்த கடன் உதவி மூலம் தங்களின் வாழ்வாதாரத்தை நீங்கள் மேம்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

தாட்கோ ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் மாவட்டத்தில் தாராபுரம், குன்னத்தூர் மற்றும் பல்லடம் என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பழங்குடியின பயனாளிகள் பங்கேற்று ஆலோசனை பெற்றனர்.

குமரன் நினைவகம் முன்பாக
தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருப்பூர்,செப்.20: திருப்பூர் குமரன் நினைவகம் முன்பாக பன்னாட்டு நிறுவனத்தை கண்டித்து சிஐடியு மாவட்ட தலைவர் மூர்த்தி தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் சிப்காட் பகுதியில் செயல்பட்டு வரும் பன்னாட்டு நிறுவனம் ஏசி, வாஷிங் மெஷின், டிவி, குளிர்சாதன இயந்திரம் உள்ளிட்ட பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. 1500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி செய்கின்றனர். இந்நிறுவனத்தில் ஊதிய உயர்வு மற்றும் பொது கோரிக்கை குறித்து நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியும் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.தொழிற்சங்கம் துவக்கப்பட்ட நிலையில் தொழிற்சங்கத்தை ஏற்க மறுப்பது உள்ளிட்ட நிர்வாகத்தின் செயல்பாடுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

▶ திருப்பூர் குமரன் நினைவகம் முன்பாக சிஐடியு தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்பாட்டத்தில் சிஐடி மாவட்ட செயலாளர் ரங்கராஜ், கட்டுமான சங்க செயலாளர் குமார், மாவட்ட பொருளாளர் சம்பத் மற்றும் சிஐடியு நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

ஓய்வூதியம் 5 ஆயிரம் வழங்க வலியுறுத்தி
பிஎம்எஸ் தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், செப்.20: திருப்பூர் பல்லடம் சாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே அமைந்துள்ள தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவன அலுவலகம் முன்பாக பாரதிய மஸ்தூர் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் வழக்கறிஞர் பிரபு தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், இபிஎப் ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட வேண்டும், மருத்துவ காப்பீடு வசதி ஏற்படுத்தி தரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.

▶ பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பாரதிய மஸ்தூர் சங்கத்தினர் திருப்பூர் பல்லடம் ரோட்டில் உள்ள பி.எப். அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் மாதவன், மாவட்ட செயல் தலைவர் செந்தில், மாவட்டத் தலைவர் லட்சுமி நாராயணன்,பொருளாளர் சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஒரு பகுதியாக மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் சிசுபாலனை நேரில் சந்தித்து தங்கள் கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை மனுவாக வழங்கினர்.

மாணவி தூக்கிட்டு தற்கொலை

பல்லடம், செப்.20: பல்லடம் அருகே பள்ளி மாணவி தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பல்லடம் அருகே உள்ள கரடிவாவி காலனி பகுதியை சேர்ந்தவர் சண்முகம். இவரது மகள் சர்மிளா (16). இவர் அதே பகுதியில் உள்ள பள்ளியில் 11-ம் வகுப்பு படித்து வந்தார். நேற்று முன் தினம் இரவு வீட்டில் யாரும் இல்லாத போது மாணவி சர்மிளா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே வெளியே சென்று விட்டு வீடு திரும்பிய சர்மிளாவின் பெற்றோர் மகள் தூக்கில் தொங்குவதை கண்டு அலறி துடித்தனர். தகவலறிந்த காமநாயக்கன்பாளையம் போலீசார் மாணவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.மாணவி தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கரடிவாவி, இச்சிப்பட்டியில் இன்று மின் தடை

பல்லடம்,செப்.20: பல்லடம் அருகேயுள்ள இச்சிப்பட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணி இன்று (20ம் தேதி) நடைபெறவுள்ளதால் இச்சிப்பட்டி,சின்ன அய்யன்கோவில், கோம்பக்காடு, தேவராயன்பாளையம், சின்னகோடங்கிபாளையம், சாமளாபுரம் பகுதியில் (சூர்யா நகர், மற்றும் ராம் நகர்), கோம்பக்காட்டுபுதூர், கள்ளப்பாளையம், கொத்துமுட்டிபாளையம், பெத்தாம்பூச்சிபாளையம், பெருமாக்கவுண்டம்பாளையம் பிரிவு, செந்தேவிபாளையம், குமாரபாளையம், கருகம்பாளையம்,கோடங்கிபாளையம்ஆகிய இடங்களில் இன்று மின்சார விநியோகம் இருக்காது.இதே போல கரடிவாவி, கரடிவாவிபுதூர்,செலக்கரச்சல், அப்பநாய்க்கன்பட்டி, அப்பநாய்க்கன்பட்டிபுதூர்,கோடங்கிபாளையம், மல்லேகவுண்டன்பாளையம், ஊத்துக்குளி, வேப்பங்குட்டைபாளையம்,புளியம்பட்டி, கே.கிருஷ்ணாபுரம்,மத்தநாயக்கன்பாளையம், அய்யம்பாளையம், ஆறாக்குளம்,கே.என்.புரத்தின் ஒரு பகுதி,பருவாயின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சார விநியோகம் இருக்காது.

அரசு ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், செப்.20: திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ராணி தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். சத்துணவு மற்றும் அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், நகர்ப்புற நூலகர்கள் உள்ளிட்ட 3.5 லட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியம் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும். சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக் காலமாக முறைப்படுத்த வேண்டும்.அரசுத் துறைகளில் உள்ள காலி பணியிடங்கள் அனைத்தையும் காலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் பள்ளிக்கல்வித்துறை ஊழியர்கள் ,சாலை பணியாளர்கள் சங்கம்,சத்துணவு அங்கன்வாடி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச முடி திருத்தம் செய்யப்பட்டது

▶ திருப்பூர் ஊத்துக்குளி ரோடு பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இலவசமாக முடித்திருத்தம் செய்யும் பணி நேற்று நடைபெற்றது.

திருப்பூர், செப்.20: திருப்பூர் புதிய பேருந்து நிலையம் பகுதியைச் சேர்ந்த தனியார் சலூன் சார்பாக மனநலம் பாதிக்கப்பட்ட மறுவாழ்வு இல்லங்களில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு 19 ஆண்டுகளாக முடி திருத்தும் சேவை செய்து வருகின்றனர்.அந்த வகையில் ஊத்துக்குளி ரோடு சர்க்கார் பெரியபாளையம் பகுதியில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லம் அறக்கட்டளையில் 50 நபர்களுக்கு தனியார் சலூன் சார்பாக நேற்று முடி திருத்தம் செய்யப்பட்டது. புதிய பேருந்து நிலையம் பகுதியைச் சேர்ந்த விசுவநாதன் தலைமையில் 9 முடி திருத்தும் கலைஞர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்

▶ சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் திருப்பூர் குமரன் கூட்டுறவு மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

திருப்பூர்,செப்.20: திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று கல்லூரியின் கூட்டரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் வசந்தி தலைமை வகித்தார்.நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ரோட்டரி கிளப் ஆப் நேச்சர் சொசைட்டி சார்பில் ரவீந்திரன் காமாட்சி கலந்து கொண்டு இயற்கையின் சிறப்புகள், மற்றும் அவற்றை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து மாணவிகளிடம் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மகாலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அணைகளின் நீர்மட்டம்

அணை	மொத்த கொள்ளளவு	நீர்மட்டம் அடி	நீர் வரத்து கன அடி	வெளியேற்றம் கனஅடி
சோலையார்	160 அடி	158.64	499.86	834.70
பரம்பிக்குளம்	72 அடி	71.58	830	1017
ஆழியார்	120 அடி	119.10	383	424
திருமூர்த்தி	60 அடி	47.59	915	1213
அமராவதி	90 அடி	89.50	167	192

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ்லிமிடெட்

பதிவு அலுவலகம்– இந்தியன் ரயான் காம்பவுண்டு, வேரவல், குஜராத்–362266
கிளை அலுவலகம்– G கார்ப்ரேசன் டெக் பார்க், காசர்வடவலி, கோத்பந்தர் சாலை, தானே, மகாராஷ்டிரா–400601

கோரிக்கை அறிவிப்பு (கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) கீழ்)

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பின் மாற்றப் பட்டுவாடா சேவை. இதன்மூலம் கீழ்க்குறிப்பிட்டவாறு கடன்தாரர்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது **ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (ஏபிஎச்எப்எல்)** வசமிருந்து அவர்களால் பெறப்பட்ட கடன் வசதியைத் திருப்பிச் செலுத்துவதில் அவர்கள் தவறியிருப்பதால், அவர்தம் கடன் கணக்குகள் அதற்குரிய இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி நிறுவனத்தின் ஏடுகளில் **செயல்படாச் சொத்துகள்** ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்பிறகு, ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ்லிமிடெட் ஆனது பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) இன் பிரிவு 13(2) கீழ் மேற்கூறியக் கடன்தாரர்களின் கடைசியாகத் தெரிந்த முகவரிகளில் **கோரிக்கை அறிவிப்புகள்** வழங்கி அதன்மூலம் மேற்கூறியக் கோரிக்கை அறிவிப்புகளில் தெரிவிக்கப்பட்டவாறு முழு **நிலுவைத்தொகையை** மேற்கூறியத் தொகை மீது ஒப்பந்த விகிதத்திலான மேற்கொண்டு வட்டி மற்றும் சாதாரண செலவினங்கள், செலவு, கட்டணங்கள், ஏனையவற்றுடன் திருப்பிச் செலுத்துமாறு அவர்களிடம் கோரி அழைப்பு விடுத்துள்ளது. இருந்தபோதும், கோரிக்கை அறிவிப்பு ஆனது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (சர்பாசி விதிகள்) இன் விதி 3 இன்படி, பிரசுரம் வழியேயும் வழங்கப்படுகின்றன:

வ. எண்	கடன்தாரர்/ உப-கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் / உப-ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி & கடன் கணக்கு எண்	செயல்படாச் சொத்து நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	கோரிக்கை அறிவிப்பின்படி / தேதியன்று நிலுவைத்தொகை
1	1. சிவகுமார் சேகர் மனை எண்.208, எஸ்எஃப் எண்.76/1a1, கணபதி நகர், பாப்பம்பட்டி கிராமம், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர், NGS ஒய்ட் சிமெண்ட்ஸ் & கம்பெனி அருகே, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641016. 2.ஜெயலட்சுமி சேகர் மனை எண்.208, எஸ்எஃப் எண்.76/1a1, கணபதி நகர், பாப்பம்பட்டி கிராமம், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர், NGS ஒய்ட் சிமெண்ட்ஸ் & கம்பெனி அருகே, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641016. 3. சிவகுமார் சேகர், எண்.42, தரைதளம், சிவதங்கம் நகர், இளங்கோ பள்ளி அருகே, சரவணம்பட்டி, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641035. 4. ஜெயலட்சுமி சேகர் எண்.42, தரைதளம், சிவதங்கம் நகர், இளங்கோ பள்ளி அருகே, சரவணம்பட்டி, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641035. 5.சிவக்குமார் சேகர் C/O காயத்ரி எலெக்ட்ரானிக்ஸ், எண்.2/77–A, டாபாபேட் , முதல் தெரு, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641012. 6. சிவக்குமார் சேகர் கதவு எண்.32/1 நீர்மணியக்காரர் தெரு, ராமநாதபுரம், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641045. 7.ஜெயலட்சுமி சேகர் கதவு எண்.32/1 நீர்மணியக்காரர் தெரு, ராமநாதபுரம், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641045. கடன் கணக்கு எண். LNCOI0HL–11210107395 & LNCOI0HL–11210107396	08-09-2024	11.09.2024 பழைய தேதிபிட்ட அறிவிப்பு 11.09.2023 விலக்கிக் கொள்ளப்படுகிறது. இந்த பிரசுரம் செய்யப்பட்டில் உள்ள அறிவிப்பாக கருத வேண்டும்.	ரூ.17,72,082/– (ரூபாய் பதினேழு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து எண்பத்தி இரண்டு மட்டும்) 10.09.2024 வரை நிலுவை அசல், பாக்கிகள் (சேர்ந்த தாமத கட்டணங்கள் உட்பட) மற்றும் வட்டி மூலம்.

அசையாச் சொத்து /அடமானச் சொத்துகள் விவரம்: அனைத்து துண்டு பகுதியும் அடங்கிய மனை எண்.208, அளவீடு 1200 ச.அடி, எஸ்எஃப்.எண். 76/1a1, இது கணபதி நகர், பாப்பம்பட்டி கிராமம், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர், NGS ஒய்ட் சிமெண்ட்ஸ் & கம்பெனி அருகே, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641016. **எல்லைகள்; கிழக்கு:** 23 அடி தெற்கில் இருந்து வடக்கு லேஅவுட் சாலை, **மேற்கு:** மனை எண்.201, **வடக்கு:** மனை எண்.209, **தெற்கு:** மனை எண்.207

இங்கே கூறப்பட்ட கடன்தாரர் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், நிலுவைத்தொகையை(களை) அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் அதிகான செலவு, கட்டணங்கள், செலவினங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து எங்களிடம் செலுத்துமாறு இதன்மூலம் நாங்கள் கோருகிறோம், தவறினால் செலவு மற்றும் விளைவுகள் வகையில் முற்றிலும் உங்கள் பொறுப்பில் கடனீட்டுச் சொத்தினை கவாதீனம் செய்தல் மற்றும் விற்பனை செய்தல் உட்பட நாங்கள் கடனீட்டுச் சொத்து உரிமையை அமல்படுத்துதும் வரம்புக்குட்படாத கதத்திரம் பெறுவோம்.
சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, நீங்கள் அனைவரும் நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் பெயர்மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். மேற்கூறிய சட்டப்பிரிவு உங்களால் மீறப்படுவது சர்பாசி சட்டத்தின் பிரிவு 29 மேலும்/அல்லது இது தொடர்பான ஏதேனும் பிற சட்டப்பூர்வ விதிமுறையில் விதிக்கப்பட்டிருக்கும் அபராத விதிப்புகளை ஏற்படுத்தும்.
சட்டத்தின் பிரிவு 13 இன் உ–பிரிவு (8) இன்படி, ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் நிலுவைகள் ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு ஏற்பட்ட அனைத்து செலவுகள், கட்டணங்கள், மற்றும் செலவினங்களுடன் சேர்த்து விற்பனை அல்லது பெயர்மாற்றத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பு எந்த நேரத்திலும் ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு செலுத்தப்பட்டு விட்டால், கடனீட்டுச் சொத்து ஆனது ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் விற்பனை அல்லது பெயர்மாற்றம் செய்யப்படாது. மேலும் கடனீட்டுச் சொத்தின் பெயர்மாற்றம் அல்லது விற்பனைக்காக ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாது.

நாள்: 20.09.2024
இடம்: கோயம்புத்தூர்

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
(ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)

மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட்.

CIN: U67100MH2007PLC174759

ரீடெயில் மையக் & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுஸ், சிஎஸ்டி சாலை சற்றுத் தொலைவில், கலீனா, மும்பை 400098

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (“விதிகள்”) இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், 2002 கீழ் அசையா கடனீட்டுச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

கடனீட்டு கடனீந்தோரான நிதி வசதிகள் ஆனது, பல்வேறு ட்ரஸ்ட்களின் பொறுப்பாளராக பத்திரங்களில் தெளிவாக குறிப்பிட்டுள்ளபடி இது முதல் ஒதுக்கீட்டாளர்/ஒரிஜினல் கடன் நிறுவனம் என்று குறிப்பிடப்படும்)அதன் திறனில் செயல்படும் **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு** உரிமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய உரிமை ஒதுக்கீட்டினைப் பின்பற்றி, **இஆஆர்சி** ஆனது உரிமையீந்தோர் கடமைப் பொறுப்பை ஏற்றுள்ளது. மேலும் கடனீட்டு கடனீந்தோராக அதன் உரிமைகளை செயல்படுத்துகிறது. எனவே **இஆஆர்சி**, கடனீட்டு கடனீந்தோராக அதன் திறனில், சர்ஃபாசி சட்டத்தின் 13(4) மற்றும் அதன் கீழான விதிகள் கீழ் கீழே குறிப்பிட்ட அசையா கடனீட்டுச் சொத்துகளை கவாதீனம் செய்திருந்தது.
இதன்மூலம் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மேலும் கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் 30 நாட்கள் அறிவிப்பானது கொடுக்கப்பட்டுள்ளது. கடனீட்டு கடனீந்தோர் பெயரில் அடமானம் அளிக்கப்பட்ட, கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்புர்வ அதிகாரியால் (AO) கையக கவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையா கடனீட்டுச் சொத்துகள், இங்கே கீழே குறிப்பிட்ட **இஆஆர்சிக்கு** உரிய நிலுவைத் தொகைகளை அதற்கான மேற்கொண்டு வட்டி மற்றும் பிற செலவினங்கள்/செலவுகளுடன் கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரரிடமிருந்து **இஆஆர்சியால்** பெறப்பட்ட தொகையைக் கழித்து மீட்பதற்காக, “உள்ளது உள்ளவிட்தில்”, “உள்ளது உள்ளவாறு”, மேலும் “உள்ளது எதுவோ அது” அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது. சொத்துக்கான நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏலத்துக்கு வைக்கப்படும் கடனீட்டுச் சொத்து விவரங்கள்:

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர் மற்றும் உப-கடன்தாரர் பெயர்	பொறுப்பாளி பெயர்	வங்கியின் பெயர் மற்றும் கிளை, கணக்கு எண் & ஐஎஃப்எசி குறியீடு	18.09.2024 தேதியின்படி மொத்த நிலுவைத் தொகை ரூபாயில்	நிர்ணய விலை (ரூபாயில்)	முன்வைப்புத் தொகை (இஎம்டி) ரூபாயில்	ஏலத் தேதி மற்றும் நேரம்	சுவாதீன வகை
2.	CMBHL18000066/ L & T HFL	1. M/s. டிரீம் டெலிகாம் (“கடன்தாரர்”) 2. திரு. D மகேஷ் (“உப–கடன்தாரர்”) 3) திருமதி. சரண்யாதேவி M (“உப–கடன்தாரர்”)	இஆஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி 396	ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், நாரிமன் பாய்ண்ட் 000405120290 ICIC0000004	Rs. 86,27,095.40	Rs. 1,32,00,000	Rs. 13,20,000	23-10-2024 at 11:00am	கையக கவாதீனம்

அடமானச் சொத்து விவரங்கள்: பதிவு மாவட்டம், அவினாசி வட்டம், பாலங்கரை கிராமம், S.F. எண் 539/1–2.41 ஏக்கர் இதில் சம்பந்தப்பட்ட சொத்து பின்வரும் எல்லைகள் மற்றும் பரப்பளவைக் கொண்டது: **இனம் எண்.1 எல்லைகள்: வடக்கில்:** இனம் எண் 2, **தெற்கில்:** சுப்ரமணியம் சொத்து, **கிழக்கில்:** 8 அடி தெற்கு வடக்கு பாதை, **மேற்கில்:** பிரித்தி சொத்து. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்கில்: 63.0` , கிழக்கிலிருந்து மேற்காக தெற்கில்: 59.6`, தெற்கிலிருந்து வடக்காக கிழக்கில்: 40.0`, தெற்கிலிருந்து வடக்காக மேற்கில்: 40.0` பரப்பளவு 2450 சதுர அடி. **இனம் எண்.2 எல்லைகள்: வடக்கில்:** கமலம் சொத்து, **தெற்கில்:** இனம் எண் 1 & D. பிரித்தி சொத்து, **மேற்கில்:** பொன்னம்மாள் சொத்து. **அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கில்:** 67.0`, **கிழக்கிலிருந்து மேற்காக தெற்கில்:** 67.0`, தெற்கிலிருந்து வடக்காக கிழக்கில்: 18.0`. பரப்பளவு 6030 சதுர அடி (முக்கோண வடிவில்). 3053 சதுர அடி பரப்பளவு உள்ள நிலம் ஆனது அதில் கட்டப்பட்ட R.C.C. கட்டிடத்துடன், மேலும் அங்கு இணைக்கப்பட்ட சாலைகள் மற்றும் அனைத்து பிற துணை உடைமைகளை பயன்படுத்தும் வழக்கமான பாதை உரிமைகளுடன் உள்ளுழையு மற்றும் வெளியேறுவதற்கான லேஅவுட் சாலைகள் மீது உரிமைகள் இணைக்கப்பட்டுள்ளது. (புதிய சார் பிரிவு S.F.No.539/1A).

ஏலம் செயல்பாடு குறித்த முக்கிய தகவல்:

1	அனைத்து கேட்பு வரைவோலைகளும் (DD) மேற்குறிப்பிட்ட ட்ரஸ்ட் பெயரில் மேலும் மும்பையில் மாற்றத்தக்க வகையில் பெறப்பட வேண்டும்.	
2	முன்வைப்புத்தொகை சமர்ப்பிக்க கடைசி நாள்	ஏலத் தேதிக்கு 1 நாள் முன்பு பெறப்படும்
3	ஏலப்புள்ளிகள் சமர்ப்பிப்பதற்கான இடம்	எடெல்வீஸ் ஹவுஸ், மும்பை
4	ஏலம் நடபெறுமிடம் (ஏலத்துக்கான இணையதளம்)	இ–ஏலம் (https://auction.edelweissarc.in)
5	கட்டணமில்லா தொடர்பு எண்:	18002666540
6	சொத்து பார்வையிடும் நாள் & நேரம்	முன் அனுமதியின்படி

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பு அதாவது https://auction.edelweissarc.in காணவும்.

இடம்: மும்பை
நாள்: 18.09.2024

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிக